**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.414/2021** **தேதி.**29.01.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 29.01.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | | திரு.மதன்(எ)மதனகோபால் |
| த/பெ. | | திரு.பெருமாள் |
| வயது | | 53/2026 |

துவக்க நேரம் 12.15 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. நானும், எனது மனைவி 2 வது பிரதிவாதியும் 15 ஆண்டுகளாக இராணிப்பேட்டையில் பூஜை பொருட்கள் மற்றும் நாட்டு மருந்து விற்பனை செய்யும் கடை நடத்திவருகிறோம் என்றால் சரிதான். பொருட்கள் வாங்குவது தொடர்பான அடிப்படை கணக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. நான், வாதியிடம் சீட்டு கட்டுவது தொடர்பாக, அந்த சீட்டு எவ்வளவு ரூபாய்கான சீட்டு, எவ்வளவு மாதத்திற்கான சீட்டு என்பதை என்னுடைய பதிலுரை மற்றும் எழுத்துமூல சாட்சியத்தில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். அந்த சீட்டு எந்த

மாதம் தொடங்கப்பட்டது என்ற விவரத்தை நான் என் பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. வாதி, சீட்டு நடத்திவருவதாக சொல்லவதற்கு நான் எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய பதிலுரையில் வாதி பெயருக்கு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்ததாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் நோட்டு புக்கில்தான் கையெழுத்து போட்டுள்ளேன்.

4. நான் நோட்டு புக்கில்தான் கையெழுத்து போட்டதாக நான் எனது சாட்சியத்திலும், பதிலுரையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு நான் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான், நான் நேரில் சென்று பேசினேன். நான் வாதியை நேரில் சந்தித்து பேசியதாக என்னுடைய பதிலுரை மற்றும் சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

5. நான் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டு, வாதியை நேரில் சென்று சந்தித்ததாக சொல்லும்நிலையில் எந்த தேதியில் வாதியை சந்தித்தேன் என்றால் கடந்த 17.09.2021 அன்று சந்தித்தேன். நான் வாதியை 17.09.2021 அன்று சந்தித்தது உண்மையாக இருந்திருந்தால், என்னுடைய பதிலுரையில் தாக்கல் சொல்லியிருப்பேன் என்றால் சரிதான், சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும், இதுபோன்ற

தகவலை பதிலுரையில் சொல்லவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. நான், கடந்த 17.09.2021 அன்று அறிவிப்பு சம்பந்தமாக பேச சென்றேனா அல்லது சீட்டு சம்பந்தமாக பேச சென்றேனா என்றால் வக்கீல் அறிவிப்பு அனுபியதற்காக சென்றேன். நான், மேற்கண்டவாறு சொல்லவது உண்மையாக இருந்திருந்தால், பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றால், நான் வாதியிடம் பேசிவிட்டதால் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை.

7. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள சங்கதிகளுக்கும், என்னுடைய முதன்மை சாட்சியத்திற்கும் இடையே முரண்பட்ட சங்கதிகள் உள்ளன என்றால் சரியல்ல. பதிலுரையில் வாதிக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டை ஒப்புக்கொண்டு அதற்கு முரனாக பொய்யான சங்கதிகதிகளை சொல்லி முதன்மை சாட்சியம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி தனது வழக்கை உரிய சாட்சிய சான்றாவணம் மூலம் நிரூபித்துள்ளார் என்றாலும் நான் பதிலுரையிலும், சாட்சியத்திலும் உள்ள சங்கதிகளை நானே நிரூபிக்க கடமைபட்டவர் என்றால் சரிதான், என் வழக்கை நான் நிரூபித்துள்ளேன்.

8. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.த.ஆ.1 ல் வாதி, மற்றும் என்னுடைய கையெழுத்து இல்லை என்றாலும், வேறு எந்த நபர்களின் கையெழுத்து இல்லை என்றாலும் சரியல்ல, வாதி கையெழுத்து போட்டுள்ளார்.

பி.வா.த.ஆ1 உண்மையான ஆவணம் என்பதை நானே நிரூபிக்க கடமைபட்டவர் என்றால் சரிதான், நான் நிரூபித்துள்ளேன். நான், வாதியிடம் பணம் பெற்றுக்கொண்டு அதற்காக கடனுறுதிச்சீட்டை ஏற்படுத்திக்கொடுத்துவிட்டு தற்பொழுது வழக்கிற்காக பொய் சொல்கிறனே் என்றால் சரியல்ல. எனவே தாவாப்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பாகவேண்டுமென்றால் சரியல்ல.

மறு விசாரணை:– இல்லை.

முடிவு நேரம் 12.40 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.